# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு

## 2015 / 2016 (ஏப்ரல் - 2019)

**CH: 2122 Old Testament Prophets and their teaching.**

நேரம்: 02 மணித்தியாலங்கள்

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் தலா இரண்டு வினாக்கள் வீதம் மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

### பகுதி I

1. I. இறைச்செய்தியினை அறிவிக்க இறைவாக்கினர்கள் பயன்படுத்திய அடையாள வாழ்க்கை, அடையாளச் செயல்கள் , அடையாளப் பெயர்கள் போன்றவற்றை உதாரணம் மூலம் தருக. (10 புள்ளிகள்)

   II. போலி இறைவாக்கினரை இலகுவில் அறிந்து கொள்ள உதவும் காரணிகள் யாவை? (10 புள்ளிகள்)

2. I. எலியா இறைவாக்கினரின் இறைவாக்குப் பணியினைச் சுருக்கமாகத் தருக. (10 புள்ளிகள்)

   II. எலிசா இறைவாக்கினர் புரிந்த பணியினை அவரது வல்ல செயல்களினூடாகத் தருக. (10 புள்ளிகள்)

3. I. ஆமோஸ் இறைவாக்கினர் இறைவாக்குரைக்க முன்வந்தபோது இஸ்ரயேலில் காணப்பட்ட சமுதாய, வரலாற்றுப் பின்னணிகளை வரையறை செய்க. (10 புள்ளிகள்)

   II. நீதி, நேர்மை குறித்த ஆமோஸ் இறைவாக்கினரின் போதனை யாது? (10 புள்ளிகள்)

### பகுதி II

4. "எரேமியா இறைவாக்கினரின் வாழ்வு துன்பங்களும் வேதனைகளும் நிறைந்த வாழ்வாகும்." ஆயினும் அவற்றை அவர் எதிர்கொண்டார், இறைவாக்கு உரைத்தார். இவரின் துன்பங்களினூடான இறைவாக்குப்பணி எவ்வகையில் இன்றைய துன்புறும் திருச்சபைக்கு உறுதுணையாக இருக்குமென்பதை அவரது பணியின் ஒளியில் ஆராய்க. (30 புள்ளிகள்)

5. நம்பிக்கையிழந்த மானிட வாழ்விற்கு எசேக்கியேல் இறைவாக்கினரின் 'புதிய இதயம்', 'புதிய ஆவி', 'உடன்படிக்கை', 'உலர்ந்த எலும்புகள் உயிர்பெற்றெழுதல்' போன்ற நிகழ்வுகள் எவ்வகையில் புத்துயிர் அளிக்குமென்பதை நிறுவுக. (30 புள்ளிகள்)

6. எசாயா இறைவாக்கினர் முன்மொழிந்த 'இம்மானுவேலின் பிறப்பின் அறிவிப்பு, பிறப்பு, ஆட்சி பற்றிய பண்புகளையும், யார் இந்த இம்மானுவேல் என்பதனையும் அவரது போதனையின் கண்ணோட்டத்தில் விளக்குக. (30 புள்ளிகள்)